[12th March 1964

திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, கல்பாக்கத்தில் அமைக்க இருக்கிற அணு மின்சார நிலையம் இந்திய விஞ்ஞானிகளைக் கொண்டே அமைக்கப்படப் போவதாக செய்தி வந்தது. அதைப்பற்றி தகவல் இந்த அரசாங்கத்திற்கு எட்டி யிருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தத் தகவலை டாக்டர் பாபா அவர்கள் நம்முடைய ராஜ்யத்திற்கு எழுதியிருக்கிறார்கள்.

Scholarships to the Reddy-Ganjam community

* 229 *Q*.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have ordered that no scholarships should be given to the backward community of Reddy-Ganjam in Tirunelveli district from the year 1963;

(*b*) whether it is a fact that the Government are taking steps to recover the scholarship amounts already paid to the students belonging to Reddy-Ganjam community;

(*c*) if so, the reasons therefor; and

(*d*) the number of students from whom such recovery has to be made?

THE HON. SRI P. KAKKAN : (*a*) The Government have ordered in 1957 that no fresh scholarships from the Harijan Welfare Department should be given to Reddi-Ganjam Community.

(*b*) *to* (*d*) As per the above orders the scholarships granted by mistake to three students belonging to Reddy-Ganjam community were recovered and remitted into the Treasury.

(அ) ரெட்டி-கஞ்சம் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஹரிஜன நலத் துறை இனிமேல் புதிய சம்பளச் சலுகைகள் எவையும் தரக்கூடாது என்று 1957-ல் அரசாங்கம் ஆணையிட்டுள்ளது.

(இ)—(எ) மேற்சொன்ன ஆணையையொட்டி, தவறுதலாக ரெட்டி-கஞ்சம் வகுப்பைச் சேர்ந்த மூன்று மாணவர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளச் சலுகைகள் திருப்பி வசூலிக்கப்பட்டு கஜானாவில் செலுத்தப்பட்டன.

திரு. செ. மாதவன் : இந்த ஸ்காலர்ஷிப் 1962-ம் ஆண்டில் கொடுக்கப்பட்டது. அதற்கு பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே இப்படிப்பட்ட ஜாதி இந்த மாநிலத்தில் இல்லை, அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கக்கூடாது என்று அரசாங்கம் உத்தரவு இட்டிருக்கிறது. அப்படியிருந்தும் சம்பந்தப்பட்ட அதிகாரி கொடுத்துள்ளார் என்றால் அந்த அதிகாரிதான் அதற்குப் பொறுப்பே தவிர அந்த மாணவர்கள் பொறுப்பு இல்லை. ஆகவே,

12th March 1964]

இதை மறுபரிசீலனை செய்து ஏற்கனவே ஸ்காலர்ஷிப் கொடுத்த மாணவர்களிடமிருந்து அதைத் திருப்பி வசூலிக்கக்கூடாது என்று அரசாங்கம் உத்தரவிடுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இதற்கு முன்பு எத்தனையோ மாணவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதையெல்லாம் திருப்பி வசூலிக்கவேண்டுமென்று நான் சொல்லவில்லை. அந்த வருஷம் 3 மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை மட்டும் திருப்பி வாங்கிவிடவேண்டுமென்று தான் சொல்லுகிறோம். அதன் காரணமாகத்தான் திருப்பிப் பெறப்பட்டது. இருந்தாலும், ரெட்டி-கஞ்சம் வகுப்பினர் நமது மாநிலத்தில் இருப்பதாக மதிப்பிற்குரிய ரெட்டிமார்கள் திரு. ஜெயராம ரெட்டியார், திரு. திருவேங்கட ரெட்டியார் ஆகியோர்கள் என்னை சமீபத்தில் வந்து பார்த்து தங்களுடைய குறைகளைத் தெரிவித்தார்கள். இதைப்பற்றி அரசாங்கம் நல்லதொரு ஆலோசனை செய்து இறுதியான முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. மாதவன் : இறுதியான முடிவு எடுப்பதற்கு முன்னாலே இடைக்கால உத்தரவு ஒன்று போட்டு, இந்த, 'ரெகவரி ப்ரொஸீடிங்ஸை' நிறுத்திவைக்கச் சொல்லி அரசாங்கம் உத்தரவிடுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இது எற்கெனவே தவறுதலாக மூன்று மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. அதைத்தான் இப்பொழுது திருப்பிப் பெற்றிருக்கிறோம். மற்றபடி இது விஷயமாக பின்னால் யோசித்து முடிவு எடுக்கப்படும்.

Mr. SPEAKER : 'Already recovered and remitted into the treasury' என்று மந்திரி அவர்கள் பதில் சொன்னதாக ஞாபகம்.

திரு. செ. மாதவன் : எற்கனவே ரெகவரி பண்ணாமல் இருக்கக் கூடிய மாணவர்களைப் பொறுத்த அளவிலாவது, மீண்டும் இந்த 'ரெகவரி ப்ரொஸீடிங்ஸ்' எடுத்துக்கொள்வதை நிறுத்திவைக்க அரசாங்கம் உத்தரவிடுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இந்த மூன்று மாணவர்களிடத்தில் இருந்து மட்டும்தான் திருப்பிப் பெறப்பட்டது. எற்கெனவே பணம் வசூல் செய்து ட்ரெஷரியில் கட்டியாகிவிட்டது. எற்கனவே கொடுக்கப்பட்டுள்ள மாணவர்களைப் பற்றி பிரச்னை கிடையாது.

திரு. க. தா. பெருமாள் ராஜு : ஸார், இந்த மாதிரி ராமகிருஷ்ண வித்தியாலயத்தில் ஃபிக்ஸட்டாக . . .

கனம் சபாநாயகர் : ரெட்டி-கஞ்சம் வகுப்பினருக்கு ஸ்காலர்ஷிப் கொடுப்பதைப் பற்றியது இந்தக் கேள்வி. அங்கத்தினர் ஏதோ இன்ஸ்டிட்யூஷனைப் பற்றிக் கேட்கிறார்கள். அது இதிலே வராது.

திரு. ஜே. மாதா கவுடர் : ஸார், இப்பொழுது ஆந்திரா மாகாணம் பிரிந்த பிறகு, இந்த ரெட்டி-கஞ்சம் வகுப்பினர் மா நிலத்திலுள்ள பிற்பட்ட வகுப்பினர் லிஸ்டிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : ரெட்டி-கஞ்சம் வகுப்பினர் லிஸ்டில் இல்லை. இந்த வகுப்பினர் ராமநாதபுரம் பகுதியில் இருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். இந்த விஷயம் அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது.

திரு. டி. கார்சா கவுடர் : ஸார், ஆந்திரா மாகாணம் பிரிவதற்கு முன்னாலுள்ள பேக்வர்ட் வகுப்பினர் லிஸ்டில் இந்த வகுப்பினர் இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் ஆந்திரா பிரிந்த காரணத்தினால்தான் இந்தத் தவறு ஏற்பட்டது என்று சொன்னார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பிற்பட்ட வகுப்பினர் இருக்கிறார்கள், சில பிற்பட்ட வகுப்பினருக்கு சர்ட்டிபிகேட்டு கொடுக்க முடியாது என்று ரெவின்யூ இலாகாவினர் சொல்லி விடுகிறார்கள். ஆகவே, ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்த எந்த பின்தங்கிய ஜாதியினர் இருக்கிறார்கள் என்பதற்கு சர்வே எடுக்கப்பட்டிருக்கிறதா ? அப்படி எடுக்கப்பட்டிருந்தால் அந்த மாதிரியான லிஸ்டை அதிகாரிகளுக்கு அனுப்பி இன்னின்ன ஜாதிக்கு சர்டிபிகேட்டு கொடுக்க வேண்டும் என்று உத்தரவு போடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அங்கத்தினர் அவர்கள் நீண்ட கேள்வி போட்டிருக்கிறார்கள். தனிக் கேள்வியாகப் போட்டால் பதில் சொல்லுகிறேன்.

அப்பளத் தயாரிப்பு நிலையங்கள்

*230 கேள்வி.—திரு. முனு. ஆதி : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்கம் நடத்திய அப்பள உற்பத்தி நிலையங்களின் நிலை என்ன ?

(இ) பொருளாதாரத் துறையில் இலாபமா நஷ்டமா ?

(உ) தினமொன்றுக்கு சராசரியாக தயாரிக்கப்படும் அப்பளங்கள் எவ்வளவு ?

(எ) அவைகளின் அடக்க விலை என்ன ?

(ஐ) அங்கு வேலை செய்பவர்களின் யோக்கியதாம்சம் என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) to (*e*) As a measure of providing some means of employment to the women of the lower income group, Government sanctioned Centres for production of applams at Madras, Thirukalukundaram, Orathur, Athoor